# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.57/2020

## 10.11.2025

## P.W.1- ஆல்பின்ராஜ்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1ம் பிரதிவாதி தனிநபர் கடன் பெற்றார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி கடனை உடன்பெற்றவர் ஆவார். 1ம் பிரதிவாதி கடன் வாங்கும்போது உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரியில் உதவியாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். மேற்படி கடனுக்கான தவணை 48 மாதங்கள் என்றால் சரிதான். மாத தவணை தொகை ரூ.2000 ஆகும். மேற்படி கல்லூரியிலிருந்து அவரது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய ஒப்பந்தம் ஏற்படவில்லை. தனிநபர் கடன் பெற்றதால் சம்பளம் பிடித்தம் செய்யவில்லை. மேற்படி கடனுக்கு ஆதரவாக வேறு ஆவணங்கள் எதுவும் உத்தரவாதமாக கொடுக்கவில்லை. மேற்படி கடனை தவிர வேறு கடன்கள் 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்படவில்லை. 2ம் பிரதிவாதி 2014ம் வருடத்தில் எங்களது வங்கியில் நகைகடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி காலத்தில் 1ம் பிரதிவாதி வாங்கிய கடன் திரும்ப செலுத்தப்படாமல் இருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு அவரது மனைவியை சேர்த்து 4 வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி 4 வாரிசுகள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பிரித்து கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.1ம் பிரதிவாதி எப்போது ஓய்வு பெற்றார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் சம்பளம் எங்களது வங்கியின் மூலம் பெறப்பட்டது என்றால் ஆரம்ப காலகட்டத்தில் கணக்கு இருந்தது. எப்போது வரை 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கு எங்களது வங்கியில் செயல்பாட்டில் இருந்தது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். 1ம் பிரதிவாதி ஓய்வு பெறும்போது அவரது ஓய்வு பலன்கள் எங்கள் வங்கி கணக்கு மூலம் வந்ததா என்றால் எங்கள் வங்கி மூலம் வரவில்லை. எங்களது வங்கி மூலம் தான் ஓய்வுதிய பலன்கள் பெறப்பட்டது என்றால் சரியல்ல. 1ம்

பிரதிவாதி சம்பளத்திலிருந்து கடனை பிடிக்காமல் 2ம் பிரதிவாதியின் மீது பரிகாரம் கோருவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. கடன் நிலுவையில் இருந்ததால் 2ம் பிரதிவாதி வங்கியில் வைத்த நகைக்கடனை மீட்கும்போது 1ம் பிரதிவாதி வாங்கிய கடனை செலுத்த தவறியுள்ளார், ஆகையால் மேற்படி நகையை மீட்க முடியாது என ஆட்சேபணை செய்யப்பட்டதா என்றால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதியானவர் வங்கியில் ஆஜராகி 2ம் பிரதிவாதியின் நகைகளை கொடுக்க கோரி உறுதிமொழி கொடுத்ததால் தான் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான நகைகளை திரும்ப கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி உறுதிமொழியின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியின் உத்தரவாதத்தை எங்களது வங்கி டிஸ்சார்ஜ் செய்யதது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஜப்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் இருப்பதால் அவருடைய சொத்துக்களை தான் பறிமுதல் செய்ய வேண்டும் என்றாலும் 2ம் பிரதிவாதியை பொறுத்து சொத்துக்கள் இல்லாத பட்சத்தில் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உயிர்பிப்பு கடிதம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உரிய காலத்தில் பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.10 16:51:38 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.